# 'சேவையில் ஈடுபடுத்த போதிய பஸ்கள் இல்லை'


**Registered as a Newspaper in Ceylon** ★ ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண். 49
போன் 389

National Tamil Daily

மலர் 9
இதழ் 310
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பிலவங்க புரட்டாதி 23 றஜப். 4 திங்கட்கிழமை [9-10-67]


## இ.போ.ச. அதிகாரிகைவிரிப்பு

யாழ்ப்பாணம், திங்கள் யாழ்ப்பாணத்தில் தற்பொழுதுள்ள நேர அட்டவணையின்படி பஸ்களை சேவைக்குவிட போதிய பஸ்கள் இல்லை இதனால்தான் அப்பகுதிகளில் புதிய சேவைகளை ஆரம்பிக்கவும், மேலதிக சேவைகளை நடத்தவும் முடியவில்லை.

யாழ்ப்பாணத்தில் பஸ் சேவை சீர்கேடு சம்பந்தமாக பேட்டி கண்ட தென் யாழ்ப்பாணம் பஸ்பிரயாணிகள் சங்க தூதுகோஷ்டியிடம், நேர அட்டவணைப் பொறுப்பாளர் திரு. என். எஸ், கந்தையா தெரிவித்தார். இக் கோஷ்டியினர் பிரதம சேவை இயக்குநர் அதிகாரி திரு. சேரத்தையும் சந்தித்தனர்.

இக்கோஷ்டிக்குத் தலைமை தாங்கிய சங்கத்தின் உப தலைவர் திரு. ஏ. கந்தையா யாழ்ப்பாணமததியடிப்போ பொறியியல் பகுதி பொறுப்பாளர்கள் பற்றி விசாரணை செய்து அவர்களை இடமாற்றம் செய்யும்படி கேட்டுக் கொண்டார்

இ. போ.ச. தலைவர் திரு. சில்வாவிற்குத் தென் யாழ்ப்பாணம் பஸ் பிரயாணிகள சங்கம், பஸ்சேவை சீர்கேடு பற்றி கடிதம் எழுதியதைத் தொடர்ந்து இதுசம

[6-ம் பக்கம் பார்க்க]

# அட்லி பிரபு காலமானர்

## இலங்கைக்கு சுதந்திரம் வழங்கிய முன்னுள் பிரிட்டிஷ் பிரதமர்



லண்டன், அக்டோபர் 8

**இலங்கைக்குச் சுதந்திரம் கிடைப்பதற்குப் பொறுப்பாய் இருந்தவர்களில் ஒருவரும், இலங்கையில் ஜனநாயக ஆட்சி நிலைப்பதில் அக்கறையும், அனுதாபமும் கொண்டவருமான முன்னுள் பிரிட்டிஷ் பிரதம மந்திரி அட்லி பிரபு இன்று காலமானர்.**

லண்டனிலுள்ள ஆஸ்பத்திரியொன்றில் அவர் காலமானுர். காலமாகும்போது அட்லி பிரவுக்கு 84 வயது. சில ஆண்டுகளுக்கு முன்னர் அட்லி பிரபு இலங்கைக்கு விஜயம் செய்தார். அப்பொழுது பேராதனைப் பல்கலைக்கழகம் இவருக்கு சட்ட கலாநிதி பட்டம் வழங்கிக் கௌரவித்தது.

பிரிட்டிஷ் ஆதிக்கத்திலிருந்த இந்தியா, இலங்கை, பர்மா போன்ற நாடுகளில் சுதந்திரக்கிளர்ச்சிகள் ஓங்கி இருந்த வேளையில் பிரிட்டனின் வெளிநாட்டுக் கொள்கையில் தாராள மனப்பான்மையைக் காட்டியிந்த நாடுகளுக்குச் சுதந்திரம் வழங்குவதற்கு அட்லிபிரபு பெரிதும்காரணமாய் இருந்தார்.

பலநாட்களாக அவர் நோய்வாய்ப் பட்டிருந்தார். இன்று ஆஸ்பத்திரியில் அவரது உயிர் அமைதியாகப் பிரிந்தது.

அட்லி பிரபு 1945-51ம் வருடங்களில் பிரிட்டிஷ் பிரதமராகவிருந்த காலத்திலேயே இந்தியா, பாகிஸ்தான், பர்மா, இலங்கை மற்றும் பல ஆசிய நாடுகளுக்கு அரசியல் விடுதலை கிடைத்தது.

தனது குடியேற்ற நாடுகள் சம்பந்தமாகப் பிரிட்டன் தாராள மனப்பான்மையுடன் நடந்து கொள்ள வேண்டுமென்ற கொள்கையைக் கடைப்பிடித்தவர் அட்லி பிரபு. ஆசியா அவரை அதற்காக மறக்காது.

### "உலக மேதை"

"ஆசிய நாடுகள் பலவற்றுக்கு விடுதலையளித்த அட்லிப் பிரபு அவர்கள் உலக அரசியல் மேதைகளில் ஒருவர். அவர் மரணம் பாரதத்

[6-ம் பக்கம் பார்க்க

### குடிதண்ணீர் பற்றி மந்திரிக்கு மகஜர்

யாழ்ப்பாணம், திங்கள் வடமாகாண கூட்டுறவுக் கடற்றொழிலாளர் சங்கச் சமாஜத் தலைவர் உள்ளூராட்சி அமைச்சருக்கு அண்மையில் அனுப்பிய மகஜரொன்றில் காரைநகர் தோம்புக்காடு கடற்றொழிலாளர்களின் குடிதண்ணீர் விநியோகத்தைக் கூடிய கெதியில் மேற்கொள்ளச் செய்ய

[6-ம் பக்கம் பார்க்க]

### பாதி பஸ்கள் பழுது

யாழ்ப்பாணம், திங்கள் யாழ்ப்பாணம் மத்திய டிப்போவில் உள்ள 31 இரட்டைத்தட்டு பஸ்களில் 15 பஸ்கள் பழுதடைந்துள்ளதாக தெரிய வருகிறது.

## 'சீன-இலங்கை ஒப்பந்தம் புதுப்பிப்பதில் கஷ்டமில்லை'

### பிரதமர் டட்லி நம்பிக்கை

கோலாலம்பூர், அக். 8

இலங்கைக்கும் — சீனவுக்கும்இடையில் ரப்பர் - அரிசி பண்டமாற்று வர்த்தகம் சம்பந்தமான ஒப்பந்தம புதுப்பிக்கப்படுவதில் எதுவிதகஷ்டமும் இருக்கும்என்று தாம் கருதவில்லையென்று இலங்கைப் பிரதமமந்திரி திரு. டட்லி சேனநாயகா இன்று இங்கு பத்திரிகை நிருபர்களிடம் கூறினர்.

1953-ம் ஆண்டில் தாம் பிரதமமந்திரியாகவிருந்த பொழுது இலங்கை - சீன வர்த்தக ஒப்பந்தம் ஏற்பட்டதாகவும 5 ஆண்டுகளுக்கொருமுறை இது புதுப்பிக்கப்படவேண்டுமெனறும் அதன்படி அடுத்தமாதத்தில் இவ்வொப்பந்தம் புதுப்பிக்கப்படவேண்டுமென்றும் இலங்கைப்பிரதமர்கூறினர்.

[6-ம் பக்கம் பார்க்க]

"எதிர்க்கட்சி சார்பில்

## சிறுபான்மைத் தமிழரை செனட்டராக்குக"

### யாழ்ப்பாணம் வரும் இடதுசாரி தலைவர்களைக் கோருவர்

யாழ்ப்பாணம். திங்.

எதிர்க்கட்சி சார்பில் சிறுபான்மைத் தமிழர் ஒருவரைத் செனட்டராகத் தெரிவுசெய்வதற்கு முயற்சி எடுக்குமாறு, நாளை வடபகுதிக்கு விஜயம் செய்யும் இடதுசாரித் தலைவர்களை சிறுபான்மைத் தமிழர் கோஷ்டியொன்று கோரவிருப்பதாகத் தெரிய வருகிறது.

சிறுபான்மைத் தமிழர் பிரச்னைகள் பற்றிஆராய்ந்து நடவடிக்கை எடுப்பதற்காக திரு. ரி. பி. சுபசிங்கா [ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி] திரு. லெஸ்லி குணவர்த்தன [சமசமாஜக்கட்சி], பீட்டர் கெனமன் [கம்யூனிஸ்ட் கட்சி]ஆகிய மூவரும் நாளை யாழ்ப்பாணம் வருகின்றனர்.

இம்மூவர்களிடமும், செனட்சபையில் காலியாகவிருக்கும் இடங்களில் ஒன்றை எதிர்க்கட்சி சார்பில்சிறுபான்மைத் தமிழர் ஒருவருக்கு ஒதுக்கும்படி கோருவதற்கு சிறுபான்மைத்தமிழர் கோஷ்டியொன்று முடிவு செய்திருப்பதாக அறியப்படுகிறது.

[2-ம் பக்கம்பார்க்க]

## நூல்நிலையகட்டட வேலைகளை மந்திரி பார்வையிட்டார்

யாழ்ப்பாணம், திங்.

யாழ்ப்பாணம் பொதுஜன நூல்நிலையத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கும், கட்டட இறுதி வேலைகளைஸ்தலஸ்தாபன மந்திரி திரு. எம். திருச்செல்வம் நேற்றுமாலை பார்வையிட்டார்,

மந்திரியுடன் விசேஷ கமிஷனர் திரு. என், நடேசன், மாநகரசபைகமிஷனர் திரு. கட்சன் செல்வராசா, மராமத்து இன்ஜினியர் திரு. ஈ. எஸ். வைநதிலிங்கம் ஆகியோரும் வந்திருந்தனர்.

நூல்நிலையத்திற்கு முன்பாக உள்ள தடாகத்தில்நிறுவப்பட்டிருக்கும் யாழ். நங்கையின் சிலையை பார்வையிட்டபின்னர், நூல் நிலைய மேல்மாடிக்கு சென்று வேலைகளைப் பார்வையிட்டார்.

நகரத்தில் நடந்துள்ளஅபிவிருத்தி வேலைகள்பற்றியும், மற்றும் முன்னேற்றத் திட்டங்கள் பற்றியும், மந்திரியிடம் கூறப்பட்டதாக தெரிய வருகிறது

## பிரதமர் டட்லி யாழ்ப்பாணம் வருகிறர்

### நவீன சந்தைக்கு அடிக்கல் நாட்டுவதற்கு

யாழ்ப்பாணம், திங்கள்

பிரதமர் திரு.டட்லி சேனநாயகா இம்மாத இறுதியில் உத்தியோக பூர்வமாக யாழ்ப்பாணம் விஜயம் செய்யவிருக்கிருரென அறியப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் மாநகரசபையால் கட்டப்படவிருக்கும் நவீன சந்தைக்கான அத்திபாரக்கல்லை நாட்டி வைப்பதற்காகவே பிரதமர் இங்கு விஜயம் மேற்கொள்ளவிருப்பதாகத் தெரிய வருகிறது.

பழைய பஸ் நிலையத்தில் 35 லட்சம் ரூபா செலவில் மூன்று மாடிகள் கொண்ட இந்த நவீன சந்தை கட்டப்படவிருக்கிறது.

## வர்த்தக ஸ்தாபனங்களில் திடீர் சோதனை

யாழ்ப்பாணம், திங்கள் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பல வர்த்தக ஸ்தாபனங்களையும் வடபகுதி பொலிஸ் சுப்பிரின்டன் திரு. ஆர். சுந்தரலிங்கமும், இராணுவ கமாண்டர் திரு. மொரிஸ் ஜெயவீராவும் நேற்றுத் திடீர் சோதனையிட்டார்கள்.

இங்கிருந்து அரிசி, பாக்கு பால்மா, போன்ற பொருட்கள் கள்ளமாக இந்தியாவுக்குக் கடத்தப்படுவதாக தற்பொழுது அடிபடும் செய்திகளைத் தொடர்ந்தே இத்திடீர் நவடடிக்கைஎடுக்கப்பட்டதாகத் தெரிகிறது.

ஆனையிறவுதடைமுகாமில் பரிசோதனையிடப்பட்ட பொருட்களில் எவ்வளவு தொகையான பொருட்கள் பருத்தித்துறை, வல்வெட்

[6-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

மனிதன் உடலிச்சையைப்பற்றி சிந்திப்பதனுல் அவற்றில் பற்றுதல் உண்டாகின்றது. பற்றுதலில் இருந்து ஆசை பிறந்து, ஆசை குரோதமாகக் கொழுந்துவிட்டெரிகிறது குரோதத்தினுல் சிந்தை மயக்கம், நினைவு தவறல் ஏற்படுகின்றன. நினைவுதவறுதலால் மனிதனின் புத்தி நாசமடைகின்றது. புத்திநாசத்தினுல் மனிதன் அழிகிறுன். —மகாத்மாகாந்தி

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone: 389.
(... பிலவங்க ஹு
புரட்டாதி 23உ 9-10-67)

## விவசாயக்கடன்

விவசாயம் செய்பவர்களுக்கு அரசாங்கம் அளிக்கும் கடனுதவி அவர்களுக்கு நேரத்துக்குக் கிடைப்பதில்லையென்று குறைகூறப்படுகிறது. முக்கியமாக, வானத்தை எதிர்பார்த்திருக்கும் நெல் விவசாயிகள் ஆவணி மாதத்தில் மழை ஆரம்பிக்கும்போது வயல்களை உழுது பண்படுத்தி விதைநெல் வாங்கி காலபோக வேளாண்மை தொடங்குவார்கள். இவர்களுக்கு அரசாங்கம் கொடுக்கும் கடனுதவி நேரத்துக்குக் கிடைத்தால்தான் ஒழுங்காகவிவசாயம் செய்து அக்கடனை அவர்கள் திருப்பிக்கொடுக்க ஏதுவாகும். இது சம்பந்தமாக கிளிநொச்சி எம். பி. அரசாங்கத்துக்கு முறையிட்டுள்ளார்

அரசாங்கம் பல வழிகளாலும் விவசாயிகளுக்கு உதவியும் ஊக்கமும் அளித்துவருவது வரவேற்கத்தக்கதே. என்றுலும் செய்யும் உதவியை செய்யவேண்டிய நேரத்தில் செய்யாவிடில், அது பயனற்றுப்போகும்.

நாட்டின் உணவு உற்பத்தியைப் பெருக்குவதே தற்சமயம் அரசாங்கத்தின் முழுமுதல் நோக்கமாயிருக்கிறது. போகுமிடமெல்லாம் நமது பிரதம மந்திரியார் இதை வற்புறுத்தி வருகிறுர். நமது நாடு பொருளாதாரத்துறையில், பிற நாட்டினரின் தயவை நாடாமல், சுதந்திரமாக நிற்பதற்கு இதுவே முதற்படி. ஆகையால் உணவு உற்பத்திப் பெருக்கத்தில் முதுகெலும்பாகவிளங்கும் உழவருக்கு அரசாங்கம் செய்யும் உதவிகளை நேரத்துக்குச்செய்துவிடவேண்டும்.

அரசாங்க உதவி கிடைக்காவிட்டால், விவசாயிகள் வேறுவழியின்றி. எப்படியாவது கமத்தை விளைவிக்கவேண்டுமென்ற எண்ணத்துடன் அதிக வட்டி வாங்கும் தரகுச்சுருக்களிடம் பணத்தைக் கடன் வாங்கி கமம் செய்வார்கள். இந்த நிலையில் அவர்களுக்கு மழை பொய்த்துவிட்டதேயானுல் விளைச்சல் குறைந்து சில சமயம் விளைவே இல்லாமலும் போகக்கூடும். இரண்டு மூன்று தடவை இப்படி அவதிப்பட்டவர்கள் களைத்துப்போய் விவசாயத்தை கைவிட்டுவிடவும் கூடும்.

இலங்கையின் பல பாகங்களில் பயிர் நஷ்டம் அடைந்துவிட்டால் விவசாயிகளுக்கு நஷ்டஈடு கொடுக்கும் ஒரு பயிர் இன்ஷூரன்ஸ் திட்டம் தொழிற்படுகிறது. ஆனுல் இன்றுவரை இத்திட்டம் யாழ்ப்பாண குடாநாட்டுக்கு வந்து சேரவில்லையெனத்தெரியவருகிறது. இந்நிலையில் மேகத்தை நம்பியிருப்பவன் நேரத்துக்கு கடனுதவி கிடைக்காமல் கடைசியில் விளைச்சல் இல்லாமலும் போய்விட்டால் அவனுடைய கதி என்னவாகிறது?

இவை எல்லாவற்றிலும் மேல் இன்னுெரு வதந்தி வடபகுதி விவசாயிகளுக்கு மேலும் கலவரத்தை கொடுத்திருக்கிறது. அரசாங்கம் கொடுக்கும் கடனைத் திருப்பிக் கொடுக்காத விவசாயிகளுக்கு இலவச அரிசி கொடுப்பதில்லை என்பதே அச்செய்தி. நல்லவேளையாக இது இன்னும் அரசாங்கத்தால் உறுதிப்படுத்தப்படவில்லை. இது வெறும் வதந்தியாய் இருக்க வேண்டுமென்றே நாம் விரும்புகிறோம். ஆயினும் இப்படியான செய்திகள் விவசாயிகளுக்கு ஊக்கமளிப்பவையல்ல.

விவசாயிகளுக்கு அரசாங்கம் அளிக்கும் உதவிகளை காலாகாலத்தில் செய்தால் தான் அவர்களும் ஊக்கத்துடன் உழுது பயிர் செய்து உணவைப் பெருக்குவார்கள்.

## இன்றைய பலன்

9-10-67
திங்கட்கிழமை
(புரட்டாதிமாதம் 23உ)

நட்சத்திரம்- கேட்டை பகல் 7-18மேல் மூலம்.
திதி- ஷஷ்டி. பகல் 1-32 மேல் ஸப்தமி.
சுபநேரம்-12-02- 1-32
ராகுகாலம்- 7-32 - 9-02.

மேஷம்-புத்திரர் மகிழ்ச்சி, புதிய பாதை.
ரிஷபம் - தூற்றல்களை தொடுப்பர், துச்சமாக மதி.
மிதுனம் - கலந்துவிடும் கண்கள் பிறந்துவிடும் காதல்.
கடகம்-தவிக்கும் நெஞ்சம், தவறுன பாதை.
சிம்மம் - அப்பன்வழி ஆதரவு தப்பாமல் வரும்.
கன்னி- தொழிலில் சோர்வு, சுறுசுறுப்புவேண்டும்.
துலாம் - எதிர்பாராத வரவு, எண்ணியது கைகூடும்.
விருச்சிகம் - கைக்கடங்காச் செலவு கடன்பட நேரிடும்.
தனுசு -நூதனரோகம், தாமதகுணம்.
மகரம்-நயம்பட உரைத்தல், நற்செய்தி.
கும்பம் - வீண்முயற்சி, வேதனை மிகுதி.
மீனம் - அன்னையின் அன்பு, அமைதிக்குவழி.

—சோதிடக் கலாநிதி—
திருமலை வேலும்பிள்ளை

## சிறுபான்மை...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இவர்கள் மூலம், சிறுபான்மைத் தமிழர் ஒருவரைச் செனட்டராகத் தெரிவு செய்யக் கோரும் மகஜர்ஒன்றை எதிர்க்கட்சித் தலைவர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவிடம் சமர்ப்பிக்கவும் முயற்சி நடைபெறுவதாக அறியப்படுகிறது.

செனட்சபையில் 10 அங்கத்தவர்களின்பதவிக்காலம் இம்மாதம் 12-ம் தேதியுடன் முடிகிறது.எதிர்க்கட்சியினர் புதிதாக இரு செனட்டர்களைத் தெரிவு செய்யலாம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## ஆசிரியர் சர்மா ஐயா



தமிழும் சைவமும் வளர வண்ணார்பண்ணையிலே, ஆறுமுகநாவலர் வித்தூன்றிய பாடசாலையிலே ஆசிரியசேவை முழுதும் செய்து முடித்து - தொடங்கிய பாடசாலையிலேயே கடைசிவரை கற்பித்து- 36 ஆண்டுகள் மேலான பணி புரிந்து இன்று ஓய்வு பெற்றுர் ''சர்மா ஐயா'' எனும் ஆசிரியர் ஆத்மநாத சர்மா அவர்கள்.

எந்த வகுப்பாயினும், எந்தப்பாடம் ஆயினும் சிறப்புடன் கற்பிக்கும் ஆற்றலும் கருமமே கண்ணுயினர் என்ற பண்பும் அமைந்தவர் அவர்.

தமிழ், ஆங்கிலம், வடமொழி ஆகிய மும்மொழியாற்றலமைந்ததுடன் எழுதும் ஆற்றலும், பேசும் ஆற்றலும் சமய ஞானமும் ஒருங்கு சேரப்பெற்றவர் அவர். வடமொழியும் தமிழும் கற்றவரும் உயர்பண்பாளரும் ஆய வைத்தியேஸ்வர சாஸ்திரிகள் அவர்கள் இவரது தந்தையார்.

நல்ல குடும்பம் ஒரு பல்கலைக்கழகமென்பர். இவரது குடும்பத்தில் இருபட்டதாரிகள்; ஒரு டாக்டர். அவர்கள் இவரது புத்திரர்கள். அகில பிராமண குரு சேவா சங்க உபதலைவர். ''ஞானதீபம்'' சஞ்சிகையின் ஆசிரியர். வடமொழியிலிருக்கும் 'லலிதா சகஸ்ர நாமம்' தோத்திரப் பாமாலையைத் தமிழில் ''அன்னை லலிதாம்பிகை அருட்பேராயிரம்'' எனும் பெயரில் மொழிபெயர்த்து அதன்வெளியீட்டு விழாவும் சிறப்பாக நடைபெற்றது. திருச்செந்தூர் முருகன் பெயரில் ஆதிசங்கரர் இயற்றிய 'சுப்பிரமணிய பூஜங்கம்' எனும் வடமொழிநூலை தமிழில் விருத்தப்பாவாகப் பாடியுள்ளார்.

குருமாருக்கு வழிகாட்டி போல் அமைந்த ''விநாயக மகோற்சவ விளக்கம்'', 'சைவ சமய வினுவிடைகள்' முதலியவற்றையும் இயற்றியுள்ளார்கள். யான் மாணவனுக இருந்து சர்மா ஐயாவிடம் படித்த காலத்தை என்மனம் நன்றியுடன் நினைக்கின்றது. ஆசிரியர்களுக்கு ஆசிரியர் அவர். வகுப்பு நேரம் வீணுகாது முழுநேரமும் மாணவரை இயங்க வைப்பதில் சர்மா ஐயா அவர்கள் வன்மையை என்னென்பேன். அவரது மாணவரில் பலர் இன்று உயர் பதவி வகித்தும் பேர்பெற்ற எழுத்தாளராகப் பணிபுரிந்தும் வருகின்றனர்.

வயது அறுபது ஆயினும் இன்றும் இளமை குன்றுத் தோற்றத்துடன் பொலியும் ஆசிரியர் சர்மா ஐயா அவர்கள், இனிச்செய்யவேண்டிய பணிபலவுள. ஈழத்துக் கல்வி உலகமும் சைவ உலகமும் அவர்களைப் பூரணமாகப் பயன்படுத்துமென்பதில் ஐயமில்லை.

—புதுமைலோலன்

## இன்று

யாழ்ப்பாணம், திங்கள்

வண். வடகிழக்கு சன சமூக நிலைய ஆதரவில் இன்றுமாலை யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் சரஸ்வதி பூசை கொண்டாடப்படும். இவ்வைபவத்தின் போது 'சித்திரச்சுடரொளி' என்னும் நூலும் வெளியிடப்படும். விழாவுக்கு முன்னுள் யாழ்.மாவட்ட உதவி வித்தியாதிபதி திரு.எஸ்.யூ. சோமசேகரம் தலைமைதாங்குவார். உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் கோப்பாய் எம். பி திரு.எஸ். கதிரவேற்பிள்ளை உட்பட அறிஞர்கள் உரை நிகழ்த்துவரெனவும், முகாந்திரம் ஈ. பி. இராசையா நூலின் முதற் பிரதியை வாங்குவாரெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஐயாறன் எழுதுவது

புத்தளத்திலிருந்து ''பக்தன்'' என்று கையெழுத்திட்டு ஓர் அன்பர் எழுதியுள்ள கடிதத்தில், புத்தளம் முத்துமாரியம்மன் கோவிலில், நவராத்திரி விழா இம்முறை மிகவும் சிறப்பாக நடந்ததாகக்கூறி ஒரு குறையைக் கூறுகின்றுர்.

''கோவிலில் முன்பாக சில வாலிபர்கள் வாயில் சிகெரட் புகைத்தபடி நின்று கதைத்து, பக்தியுடன் வழிபட நின்றவர்களுக்கு மனம் புண்ணுகும்படி நடந்துகொண்டனர். அவர்களை அப்படிச் செய்ய வேண்டாமென்று ஒருவிரலை அசைக்கவும் ஒருவரும் முன் வரவில்லை. இனி இவ்விதம் நடவாதவாறு என்ன செய்யலாம்?'' என்று மனவேதனையுடன் கேட்கின்றுர்.

இதைப்பற்றி இங்கு ஒருவரைக்கேட்டதற்கு, பொலிசிடம் புகார் செய்தால் அவர்கள் கோவிலுக்குமுன் இப்படி நடவாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது அவர்களது கடமை என்றுர். இவ்விஷயத்துக்கும் பொலிசிடம் சொல்லுவது எனக்குப்பிடிக்கவில்லை. வழிபடுபவர்களின் மனதைப் புண்படுத்த வேண்டுமென்ற எண்ணத்துடன் யாரும் இவ்விதம் செய்வதாக எனக்குத் தோன்றவில்லை. அன்பான முறையிலே பணிவுடன் கேட்டுக்கொண்டால், எந்த வாலிபரும் உடன் செவி சாய்த்து இனி அவ்விதம் செய்யமாட்டார்கள். அப்படிக்கேட்கும் உணர்ச்சிகூட வழிபடவரும் பக்தர்களில் ஒருவருக்கும் இல்லாவிடில், அது பெரிய துரதிருஷ்டம். அன்பு முறையில் கேட்டால் தலையா போய்விடும்.? இந்த உணர்ச்சிகூட இல்லாவிடில் நம் கோவில்களும் தர்மஸ்தாபனங்களும் எப்படி முன்னேற முடியும். இந்துசமயத்தின் முன்னேற்றம் இந்துக்கள் கையில் தான் உள்ளது. எனக்கு எழுதிய 'பக்தனே' இதைச் செய்யக்கூடாதா?

ஃ ஃ ஃ

தமிழகத்தில் இருக்கையில், தெய்வீகப் பேரவையிலே ஒரு தீர்மானம் நிறைவேறியதைப் பார்த்தேன். இப்போது தமிழகத்தில் காட்டப்பெறும் 'திருவருட் செல்வர்' என்ற படத்திலே, பல தவறுகள் இருப்பதாயும், இவ்வித படங்களை வெளியிடுமுன், தங்கள் பேரவையிலிருந்து ஒருவரை தணிக்கைசபையில் சேர்த்துக்கொண்டு அவரது சம்மதத்தைப் பெறவேண்டுமென்றும் கேட்டனர்.

அந்தப்படத்தைப் பார்க்க வேண்டுமென்று எனக்கு ஆவல் ஏற்பட்டது. அந்த ஒரே ஒருபடத்தைத்தான் இம்முறை அங்கு கண்டேன். தஞ்சாவூரிலே ஒரு முதல்தர சினிமா மாளிகையில் 'பால்கனி' சீட்டுக்கு ரூ. 1-60 தான். பல நகரெங்கும் சுவருகளிலே இப்படத்துக்குப் பெரிய விளம்பரம். காஞ்சி காமகோடி பீடாதிபர் போல் சுவர்ப்படங்களில் சிவாஜி காட்சியளிப்பதைக் கண்டு பிரமித்தும்போனேன். ஆனுல் திரைப்படத்தைக் காணும்போது எனக்கு ஏற்பட்ட ஏமாற்றம் கொஞ்சமல்ல.

சைவ சமய குரவர்களான சுந்தரர், சம்பந்தர், அப்பர் இம் மூவரைப் பற்றியும் தான் கதை. முதல் காட்சியே சுத்த ஆபாசம். கீழ்த்தரமான நடனங்கள். அந்தப்படத்தைஏன்மேலும் பார்க்கிறேமென்று தோன்றியது. பார்ப்பவர்களுக்கு

[3-ம் கலம் பார்கக]

[5-ம் கலத்தொடர்ச்சி]

இருக்கிற பக்தியும் போய்விடும் போலுள்ளது. அப்பர் கையில் வைத்துள்ள உழவாரக்கருவியை ஒரு சமயமும் உபயோகிக்கவில்லை. ஏன் அதை அவர் செல்லுமிடமெல்லாம் வைத்துக் கொண்டிருக்கிறுர் என்று தெரியவில்லை.

சமயத்தின் மூலம் சமூகப் பணியைச்செய்யலாமென்று காட்ட எவ்வளவு நல்ல சந்தர்ப்பம்! திருமறைக்காட்டுக்கோவிலில் கதவு திறக்கவும் மூடவும் அப்பரும், ஞானசம்பந்தரும் பாடிய பதிகங்கள் ஈழத்தில் சைவப் பொடியன்களுக்கும் தெரியும். ஆனுல் 'மாசில் வீணையும்', 'காதலாகிக் கசிந்து' என்ற பாடல்களை இருவரும் அங்கு பாடுவது சுத்த அபத்தம்.

அப்பூதி அடிகள் தம்பதிகளின் காட்சியைப்பார்க்கும்போது அந்த வேடமும் பேச்சும் வேதனை அளித்தது. பாம்பு கடித்த பையனை எழுப்ப திருநாவுக்கரசர் பரமனைக்குறித்து பதிகம் பாடினுர். ஆனுல் இந்தப் படத்தில். பாம்பைப் பார்த்துப்பாடுகிறுர் அப்பர். சிவபெருமானை ஒன்றும்வேண்டவில்லை. உடனே அந்தப் பாம்பு அப்பிள்ளையைக் கடித்த இடத்தில் மீண்டும் வாயை வைத்து விஷத்தை உறிஞ்சி எடுத்து மறைந்துவிடுகிறதாகக் காட்டியுள்ளனர். பெரிய புராணத்தில் இல்லாத கற்பனை!

தமிழகத்திலே சைவர்களுக்குத்தான் எவ்வளவு பொறுமை அல்லது அவர்கள் சமய உணர்ச்சியும் அறிவுமற்றுக் கிடக்கிறுர்களா? தெய்வீகப்பேரவை ஒருகாகிதத் தீர்மானமாவது செய்ததுபெரிய ''துணிச்சல்''லான காரியமே! தமிழக அரசு இதைக் கவனிக்குமா?

இதேகதையை பக்தியை வளர்க்கும் முறையில், பெரிய புராணத்தைத் தழுவிப் படம்பிடிக்க, தெய்வீகப் பேரவையோ, வசதியுள்ள சைவர்களோ முன்வருவார்களா?

ஃ ஃ ஃ

பண்ணின் நேர்மொழி
யாளுமை பங்கரோ
மண்ணினுர் வலஞ் செய்
மறைக் காடரோ
கண்ணினுலுமைக் காணக்
கதவினை
திண்ணமாகத் திறந்தருள்
செய்ம்மினே.

—அப்பர்சுவாமிகள்.

[பண்ணை ஒத்த மொழியாகிய உமையம்மையை ஒரு பங்கிற் கொண்டவரே! மண்ணுலகத்தவர் வலம் புரியும்மறைக்காட்டுறையும் பெருமானே! அடியேன் என் கண்களால உம்மைக்காணு... இக்கதவுகளைத் திறந்து அருள் செய்வீராக.]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கையை வெட்டி இரத்தத்தில் கடிதம்

## தென் வியட்னும் பிக்கு ஜோன்சனுக்கு எழுதினர்

சைகோன், ஒக்டோபர் 8

சைகோனில் நேற்று ஒரு பௌத்த பிக்கு, தமது கையொன்றை வெட்டி, அதிலிருந்து பிறிட்ட இரத்தத்தில், அமெரிக்க ஜனதிபதி ஜோன்சனுக்கும், தென் வியட்னும் ஜனதிபதி நிகுவென் வான்தியூவுக்கும், அமெரிக்க இராணுவ ஜெனரல் ஒருவருக்கும் கடிதங்கள் எழுதியுள்ளார்.

தென்வியட்னும் விவகாரங்களில் அமெரிக்காவின் தேவையற்ற தலையீட்டை ஆட்சேபித்து அவர் இக்கடிதங்களை எழுதியுள்ளார். தென்வியட்னும் அதிபர் ஜெனரல் நிகுவென் வான் தியூவுக்கு எழுதியுள்ள கடிதத்தில், பௌத்தர்களைத் தென் வியட்னும் ஆட்சி இம்சைப்படுத்துவதை நிறுத்துமாறும் அவர் கேட்டுள்ளார்.

# மண் ஆசைகிடையாது

## பாரதத்தின் நிலைபற்றி ஜனதிபதி

புதுடில்லி, ஒக். 8

பாரதத்துக்கு மண் ஆசை கிடையாது என்றும் அண்டைய நாட்டின் மீது ஆக்கிரமிப்பு நோக்கம் கொண்டிருக்கவில்லையெனவும் பாரத ஜனதிபதி டாக்டர் சாகிர் ஹூசேன் தெரிவித்துள்ளார்.

நேற்றுக் காலை குவாலியருக்கு அருகே எல்லைப்பந்தோபஸ்துப் படையினர் மத்தியில் பேசுகையிலேயே டாக்டர் சாகிர் ஹூசேன் மேற்கண்டவாறு கூறினர்.

எல்லைக்குள்ளும் அமைதியையும் பந்தோபஸ்தையும் பாதுகாத்துக் கொள்வதை பாதுகாப்புப்படையினர் தமது கடமையாகக் கருத வேண்டுமென டாக்டர் சாகிர் ஹூசேன் பாதுகாப்புப்படையினருக்கு எடுத்துக் கூறினர்.

9 வீரர்களுக்கு ஜனதிபதி தீரச்செயல்களுக்கான பரிசுகளை வழங்கினர்.

# ஜம்முவில் பொலிசார் கண்ணீர்ப்புகை பிரயோகம்

ஸ்ரீநகர், ஒக். 8

ஜம்முவில், பள்ளிக்கூடக் கேட்டுக்குத் தீ வைக்க முயன்ற வன்முறைக் கும்பலொன்றை கலைக்கப் பொலிசார் நேற்றுக் கண்ணீர்ப் புகைப் பிரயோகம் செய்தனர்.

அப்பள்ளிக்கூட மண்டபத்தில், உருதுமொழிஇலக்கியக் கருத்தரங்கம் ஒன்று நடைபெற்றுக் கொண்டிருந்தது.

### 20 பேர் கைது

இது சம்பந்தமாக, 20 பேரைப் பொலிசார் கைது செய்தனர்.

ஐந்து பேரோ அல்லது அதற்கு அதிகமானவரோ கூடுவதற்குப் பொலிசார் தடை விதித்துள்ளனர்.

# சீனவுடன் இந்தோனேஷியா ராஜிய உறவுகளை முறிக்கும்?

## விரைவில் நடக்கலாம் என்கிறர் டாக்டர் மாலிக்

ஜக்கார்த்தா, ஒக். 8

சீனவுடன் உள்ள ராஜிய உறவுகளை இறுதியாகத்துண்டித்துக் கொள்ளும் வகைகளில் இந்தோனேஷியா சென்று கொண்டிருப்பதாக இந்தோனேஷிய வெளியுறவு மந்திரி டாக்டர் ஆதாம் மாலிக் தெரிவித்துள்ளார்.

அவரைச் சந்திக்கச் சென்ற இந்தோனேஷிய மாணவர் சபையிடம் அவர் இத்தகவலைக் கூறினர்.

### மாணவர்களிடம் வேண்டுகோள்

மாணவர்களை அவசரப்பட வேண்டாமென்று கேட்டுக் கொண்ட டாக்டர் மாலிக், பீகிங்கிலுள்ள இந்தோனேஷிய தூதரகத்தவரும், மற்றவர்களும் ஜக்கார்த்தா திரும்பி வரும் வரை அவகாசம் தருமாறும் அவர்களிடம் கோரினர்.

பீகிங்கிலுள்ள இந்தோனேஷிய தூதரகத்தினர் ஜக்கார்த்தா திரும்பும் வரை, ஜக்கார்த்தாவிலுள்ள சீனத்தூதரகத்தினரை இந்தோனேஷியா நிறுத்திவைத்துக் கொள்ளும் என்று டாக்டர் மாலிக் அறிவித்தார்.

# 9 அமெரிக்க விமானங்கள்

## சுட்டு வீழ்த்தப்பட்டன

சைகோன், ஒக். 8

அமெரிக்க விமானங்கள் ஒன்பதைத் தாம் நேற்றுச் சுட்டுவீழ்த்தியுள்ளதாகவடவியட்னும் அறிவித்துள்ளது. அவற்றில் மூன்று விமானங்கள், ஹனேய்க்கு மேலே சுட்டு வீழ்த்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் மெக்காங் டெல்டாவில் நடைபெற்ற கடும்போரில், 90 வியட்காங்கியரைத் தாம் கொன்றதாக அமெரிக்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# கிரேக்க பிரதமர் விடுதலை

அதென்ஸ், ஒக். 8

முன்னள் கிரேக்கப் பிரதமர். பபாண்ட்ருவை, தற்போதைய கிரேக்க இராணுவ ஆட்சியாளர் வீட்டுக் காவலிலிருந்தும் விடுதலை செய்துள்ளனர்.

# லோகியா உடல்நிலை மோசமடைகிறது

புதுடில்லி, ஒக். 8

டாக்டர் ராம் மனேகர் லோஹியாவின் [illegible] நேற்றுச் சடுதியாக [illegible] மடைந்து மூச்சுவிடுவதற்கு அவருக்குச் சிரமம் ஏற்பட்டது. அதுடன்நேற்றிரவு காய்ச்சலும் அதிகரித்திருந்தது. [illegible] தாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# கி. ஐரோப்பிய நாடுகள், ஐ. அ. கு. வுக்கு இந்தியப் பிரதமரின் இருவார விஜயம்

## மே. ஆசியா, வியட்னும் உட்பட பல பிரச்னைகள் விவாதிக்கப்படும்

புதுடில்லி, ஒக். 8

**சில கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கும், ஐக்கிய அரபுக்குடியரசுக்கும் இரு வார விஜயத்தை மேற்கொண்டு, இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி, இன்று காலை புதுடில்லியிலிருந்து புறப்பட்டார்.**

முதலில் அவர் மாஸ்கோவில் 4 மணித்தியாலம் தங்குவார். போலாந்துக்கு 3 நாள் விஜயத்தில் செல்வதற்காக வார்சோ செல்லும் வழியில் அவர் மாஸ்கோவில் இறங்குவார்.

மாஸ்கோவில் அவர் ரஷ்யப் பிரதமர் திரு. கொஸிஜினின் இல்லத்தில் அளிக்கப்படும் மதிய போசன விருந்தொன்றில் கலந்துகொள்வார். அப்போது பல பிரச்னைகளையிட்டு அவர்கள் இருவரும் விவாதிப்பர். பாகிஸ்தான் ஜனதிபதி அயூப்கானின் ரஷ்ய விஜயத்தைத் தொடர்ந்து இந்தியப் பிரதமரும் ரஷ்யா செல்வது இங்கு குறிப்பிடத்தக்கது.

போலாந்து, யூகோஸ்லாவியா, ரூமானியா, பல்கேரியா, ஐ. அ. கு. ஆகிய நாடுகளுக்குப் பிரதமர் இந்திரா செல்வார்

### பொதுப் பிரச்னைகள்

இந்த நாடுகளில் திருமதி இந்திராகாந்தி மேற்கொள்ளும் பேச்சுவார்த்தைகளில் வியட்னும், மேற்கு ஆசியா, விஜயம் செய்யும் நாடுகளுடனுன இந்தியாவின் உறவுகள், வர்த்தகம், மற்றும் பொதுப் பிரச்னைகள் அடங்கும் எனத் தெரிகிறது.

### போலாந்தில்

நாளை போலாந்தில், போலாந்துப் பிரதமருடன் திருமதி இந்திரா, பேச்சுவார்த்தைகள் நடாத்துவார். போலாந்துப் பிரதமர் இந்திராகாந்திக்கு மதிய போசன விருந்தொன்றை அளிப்பார். மாலையில் போலாந்துப் பிரதமருக்கு திருமதி இந்திராகாந்தி வரவேற்பு ஒன்றைக் கொடுப்பார். இந்த இரண்டு நிகழ்ச்சிகளிலும், இரு பிரதமர்களும் கலந்துகொள்ளும் போது, பல பிரச்னைகள் பற்றிப் பரஸ்பர கருத்துக்களைப் பரிமாறிக்கொள்வர்.

போலாந்துப் பிரதமருடன் திருமதி இந்திராகாந்தி நடாத்தும் பேச்சுவார்த்தைகளில் வியட்னும் பிரனைக்கு முக்கிய இடம் கிடைக்கும். வியட்னும் மீதான சர்வதேசக் கட்டுப்பாட்டுக் கமிஷனில் இந்தியா, கனடா ஆகிய நாடுகளுடன் போலாந்தும் ஓர் அங்கத்துவ நாடு என்பது குறிப்பிடத்தக்கது.

### பத்திரிகையுடன் பேட்டி

புதுடில்லியிலிருந்து புறப்பட முன்னர் யூகோஸ்லாவிய பத்திரிகைத் தாபனம் ஒன்றுக்குப் பிரதமர் இந்திரா அளித்த பேட்டியில் தாம் விஜயம் செய்யவிருக்கும் நாடுகளுடன் இந்தியாவின் உறவுகள் கடந்த 20 வருடங்களில் குறிப்பிடத்தக்க முறையில் வளர்ந்துள்ளதாகக் கூறினர்.

### மே. ஆசியா பற்றிக் கவலை

மேற்கு ஆசியா பற்றி அவரிடம் கேட்கப்பட்டபோது அங்குள்ள நிலைமை ஆழ்ந்த கவலையை அளித்து வருவதாக அவர் குறிப்பிட்டார்.



உண்மைப் பாற்பட்டதும், நடைமுறைக் கேற்றதுமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டாலன்றி, அப்பகுதியில் அமைதியை நிலைநாட்டுவது கஷ்டம் எனப் பிரதமர் கருத்துத்தெரிவித்தார். அத்துடன், ஜூன்மாதம், போர் ஆரம்பமாகிய திகதிக்கு முன்பிருந்த நிலைகளுக்குச் சம்பந்தப்பட்ட துருப்புகள் வாபஸ்பெறவேண்டியது அவசியமெனவும் அவர் வலியுறுத்தினர்.

மேற்கு ஆசிய விவகாரம் பற்றித் தமது விஜயத்தின் போது தாம், யூகோஸ்லா

(6-ம் பக்கம் பார்க்க)

அமெரிக்கா

# குண்டுவீச்சை நிறுத்தினல் வியட்னும் போர் நிற்கும்

## சுவர்ண்சிங்கின் இக்கூற்றை யூ தாண்ட் ஏற்கவில்லை



நியூயோர்க், ஒக். 8

வடவியட்னும் மீதான குண்டு வீச்சை அமெரிக்கா நிறுத்தினல், சமாதானம் பேச வட வியட்னும் சம்மதிக்கும் என்பதில் தமக்கு இப்போதும் நம்பிக்கையிருப்பதாக ஐ. நா. பொதுக் காரியதரிசி யூதாண்ட் இங்கு பத்திரிகையாளரிடம் பேசுகையில் கூறினர்.

ஆனல், அமெரிக்கா குண்டு வீச்சை நிறுத்தினல், வியட்னும் போர் நடவடிக்கைகள் யாவும் நின்றுவிடும் என்ற, இந்திய பாதுகாப்பு மந்திரி சர்தார் சுவர்ண் சிங்கின் கருத்துடன் தாம் உடன்பட முடியாது என்று யூ தாண்ட் குறிப்பிட்டார்.

(6-ம் பக்கம் பார்க்க)

# 'எனதுகொள்கைகளிலிருந்து நான் விலக மாட்டேன்'

## வியட்னும், மற்றும் பிரச்னைகள் பற்றி ஜனதிபதி ஜோன்சன்

வாஷிங்டன், ஒக். 8

**வியட்னும், மற்றும் அமெரிக்கா உள்ளூர் பிரச்னைகளில் தனது தற்போதைய கொள்கையைத் தாம் கைவிடப்போவதில்லை என்று அமெரிக்க ஜனதிபதி திரு. ஜோன்சன் நேற்று இங்கு கூறினர்.**

வாஷிங்டனில் நேற்றிரவு நடைபெற்ற ஜனநாயகக் கட்சியின் இரவு விருந்தொன்றில் பேசுகையில், தமது இப்போதைய கொள்கைகளைத் தாம் மாற்றப்போவதில்லை என ஜோன்சன் வலியுறுத்தினர்,

வியட்னும் போரில் அமெரிக்கா அபாயகரமான எல்லைக்குச் செல்லவேண்டும் அல்லது அங்கு நடக்கும் போரை ஒரேயடியாக நிறுத்த வேண்டுமென்று கூறும் விமர்சகர்களை ஜோன்சன் கண்டித்தார்.

இப்படிப் பேசுபவர்கள், சாவதேச நலன்களில் அக்கறை எதுவும் இல்லாத ஒரு சிறிய நாடாக அமெரிக்காவைச் சணிப்பதாக ஜோன்சன் கூறினர்.



### 'சுலபமான பாதை வேண்டாம்'

உள்ளூர்ப் பிரச்னைகளில், இனப் பாகுபாடு போன்ற

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7 பிள்ளைகளின் தாய் ஜீவனும்சம் கோரி வழக்கு

குரும்பசிட்டி, ஞாயிறு

"ஏழு பிள்ளைகளையும் என்னையும் விட்டுப் பிரிந்து சென்று காரைநகர். வலந்தலை என்ற இடத்திலுள்ள நல்லதம்பி மகள் புவனேஸ்வரியுடன் எனது கணவர் சேர்ந்து குடும்ப வாழ்க்கை நடத்துகின்ருர். இவ் வருடம் ஆகஸ்ட் மாதம் முதல் எமக்கு எதுவித பராமரிப்பு செய்யவில்லை. ஊர்காவற்றுறை உணவுக் கட்டுப்பாடு அரிசி சேமிப்பு நிலையத்தில் காவலாளியாக கடமையாற்றும் எனது கணவனுக்கு மாதம் ரூபா 160 வரை சம்பளம் கிடைக்கின்றது. எனக்கும் குடும்பத்தவருக்கும் பராமரிப்புப்பணம் வழங்க உத்தரவிடுங்கள்"

இவ்வாறு மாதகல் வாசியான லெட்சுமி [வயது 35] தமது கணவர் செல்லத்துரையிடம் ஜீவனும்சம் கோரி தாக்கல் செய்திருந்தவழக்கு விசாரணையின் போது தெரிவித்தார். மல்லாகம் நீதிமன்றத்தில் பதில் நீதிபதி திரு. ஜீ. வீ. பாலசிங்கம் முன்னிலையில் இவ்வழக்கு விசாரணை நடைபெற்றது. பிரதிவாதிக்கும் சமன்ஸ் அனுப்புமாறு உத்தரவிட்ட நீதிபதி மேல் விசாரணையை 22-ம் திகதி ஒத்திவைத்தார் வாதிதரப்பில் வழக்கறிஞர் திரு. ஆர். ஜே. செல்வரத்தினம் ஆஜராகியிருந்தார்.

## 75ரூபா அபராதம்

குரும்பசிட்டி, ஞாயிறு

லைசென்ஸ் இன்றி மாடு வெட்டியதாக பண்டத்தரிப்பைச்சேர்ந்த பொன்னுத்துரை கந்தையா ஆகியோர் மீது குற்றம் சாட்டி சங்கானைப் பொலிசார் தொடர்ந்திருந்த வழக்கில் மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு. ரி. எஸ். நெத்சிங்கா முதல் எதிரி பொன்னுத்துரை குற்றத்தை ஒப்புக்கொண்டதன் பேரில் 75 ரூபா அபராதம் செலுத்துமாறு தீர்ப்புக் கூறிஞர். மற்றைய நபரான கந்தையா விடுதலை செய்யப்பட்டார்.

## சிறைச்சாலைக்குள் எவ்வாறுசென்ருர்கள்?

யாழ்ப்பாணம், திங்கள்

இனம் தெரியாத நான்கு நபர்கள் யாழ்ப்பாணம் சிறைச் சாலைக்குள் எவ்வாறு சென்ருர்கள். இச்சம்பவம் சிறைச்சாலை அதிகாரிகளுக்குப் பெரும் பிரச்னையைக்கொடுக்கத் தொடங்கியுள்ளது.

சென்ற சனிக்கிழமைமாலை இந்த நான்கு நபர்களும் சிறைச்சாலைக்குள், கைதிகளுக்கு மத்தியில் நிற்கக் காணப்பட்டபோது சிறைச்சாலைக்காவலாளர் ஒருவரால் கைது செய்யப்பட்டனர் பாணந்துறையைச் சேர்ந்த நால்வரும் லொறியொன்றில் இங்கு வந்ததாகவும் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் அண்மையில் நடைபெற்ற சில அசம்பாவித சம்பவங்களுக்கும் இவர்கள் வருகைக்கும் தொடர்பிருக்கலாமென்ற சந்தேகத்தில் பொலிசார் பூரணமாகத் துப்புத்துலக்கத் தொடங்கியுள்ளனர். [ந.நி]

# நவராத்திரி விழா

கொழும்பு, ஞாயிறு

தபால் தந்திப் போக்குவரத்து திணைக்கள இந்து ஊழியர் கழகம் இவ்வருடமும் சரஸ்வதி பூஜையைச் சிறப்பாகக் கொண்டாட இருக்கிறது மேற்படி விழா செவ்வாய்க்கிழமை மாலை கொள்ளுப்பிட்டி தபாற் கந்தோர் சேமிப்பு வங்கிக் கட்டிட மூன்றும் மாடியில் நடைபெறும். இந்துமாமன்றத்தலைவர் திரு. பொன். ஸ்ரீகந்தராஜா 'சரஸ்வதி பூஜை' பற்றிச்சொற்பொழிவாற்றுவார் இன்னிசைக் கச்சேரிகளும், நடனமும் விழாவில் இடம்பெற இருக்கின்றன.

ஃ ஃ ஃ

காரைநகர்

காரைநகர் மணற்காடு முத்துமாரி அம்மன் கோவிலில் நவராத்திரி பூசையை முன்னிட்டு தினமும் விசேஷ பூசையும் ஆராதனையும் சொற்பொழிவுகளும இடம் பெற்று வருகின்றன.

ஃ ஃ ஃ

காரைநகர் யாழ் நகர்க் கல்லூரி காரைநகர் இந்துக் கல்லூரி ஆகியன கலைமகள் விழாவினைச் சிறப்பாக கொண்டாடவிருக்கின்றன. விழாவில் இன்னிசை நிகழ்ச்சிகளும் சொற்பொழிவுகளும் இடம் பெறும்.

ஃ ஃ ஃ

இமையணன்.

நவராத்திரி விழாவை முன்னிட்டு, பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியில் ஒன்பது நாட்களும் பூஜைகள் நடைபெற்று வருகின்றன. சரஸ்வதி பூஜையின் கடைசி நாளன்று பல கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

ஃ ஃ ஃ

அநுரரதபுரம்.

அநுராதபுரவிவேகானந்த தமிழ் மகா வித்தியாலயத்தில் நவராத்திரி விழா ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. இறுதி மூன்று நாட்களிலும் விழா மிகச் சிறப்பான முறையில் கொண்டாடுவதற்கு ஆசிரியர்களும் மாணவர்களும் ஏற்பாடு செய்துள்ளனர். சிங்கள, முஸ்லீம் சமூகத்தைச் சேர்ந்த ஆசிரியர்களும் விழாக்களில் கலந்து வருவது குறிப்பிடத்தக்கது.

ஃ ஃ ஃ

அநுராதபுரம்

விவேகானந்த சபையிலும் நவராத்திரி விழாக் கொண்டாடப்பட்டு வருகின்றது, இறுதி மூன்று நாட்களுக்கும் விசேட கதம்ப நிகழ்ச்சி கச்சேரி முதலியன இடம் பெறும். அநுராதபுரத்திலுள்ள சகல இலாகக்களிலும் கடமையாற்றும் தமிழ் உத்தியோகத்தர்கள் விழாக் கொண்டாடுவதில் பெரும் ஊக்கம் காட்டி வருகின்றனர். இச்சபையின் ஆதரவில் ஆரம்பிக்கப்பட்ட சாரதாதேவி பாலர் பாடசாலையிலும் விழாக் கொண்டாடப்பட்டுவருகின்றது,

ஃ ஃ பம்பலப்பிட்டி

பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நவராத்திரி விழா ஆரம்பம் இந்து இளம் பெண்கள் சபையால் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

ஃ ஃ ஃ

சுழிபுரம்

நவராத்திரி விழாவினை முன்னிட்டு வழக்கம்பரை சனசமூக நிலைய பஜனைச் சபையினர் ஆதரவில் வழக்கம்பரை அம்மன் கோவில் மண்டபத்தில் திரு, இ. அப்பாத்துரை பி. ஏ.' சக்தியின் மேன்மை' பற்றிச் சிறப்புச் சொற்பொழிவாற்றினர்.

ஃ ஃ ஃ

இமையாணன்

வல்வெட்டித்துறை சிதம்பராக்கல்லூரியில் கலைமகள் விழா மூன்று நாளும் சிறப்பாகக் கொண்டாடப்பட இருக்கிறது. இன்னிசைக் கச்சேரிகளும் கதாப்பிரசங்கங்களும் விழாவில் இடம் பெற இருக்கின்றன.

ஃ ஃ ஃ

காங்கேசன்துறை

காங்கேசன்துறை முத்துமாரி அம்மன் கோவிலில் நவராத்ரி பூசை காங்கேசன்துறை பட்டினசபை ஊழியர்களாலும் தபால் நிலைய ஊழியர்களாலும் நடாத்தப்பட்டு வருகிறது,

ஃ ஃ ஃ

வட்டுக்கோட்டை

வட்டுக்கோட்டை கலா நிலையத்தில் நாளை மாலை கலைமகள் விழாவைச் சிறப்பாகக்கொண்டாட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. திரு. சி. பரமசாமியின் சொற்பொழிவும், இசை நிகழ்ச்சியும் நடைபெறும்.

## சேவைநலம் பாராட்டு

உடுப்பிட்டி, ஞாயிறு

கரவெட்டிவதிரிதிருஇருதயக் கல்லூரியில் உபஅதிபராகவும், ஆசிரியராகவும் பல ஆண்டுகளாகப்பணியாற்றிச் சேவையிலிருந்து ஓய்வு பெறும் திரு. பி. மரியாம்பிள்ளைக்கு ஆசிரியர்களும், மாணவர்களும் சேவை நலம் பாராட்டு விழாநடத்தினர். கல்லூரி அதிபர்திரு. நடராசா இப்பிரிவுபசார விழாவிற்குத்தலைமை வகித்துப்பேசுகையில்," ஆசிரியர்களின் கடமையுணர்ச்சியினலும், ஒத்துழைப்பினலுமே கல்லூரியும் மாணவர்களும் முன்னேற முடியும். மாணவர்கட்குப் பாடம் கற்பிப்பதுதான் ஆசிரியருடைய கடமை என்று நினைப்பது தவறு. எதிர்காலத்தில் மாணவர்களைச்சிறந்த கல்விமான்களாகவும், தேசியத் தலைவர்களாகவும் உருவாக்குவது ஆசிரியர்களின் புனிதமான பணியாகும்."


இளம் பற்களை உரமாக வளரச் செய்யவும்



உறுதியான ஆரோக்கிய ஈறுகளுக்கும் உரமான வெண்ணிறப் பற்களுக்கும்

என்றும் பாவியுங்கள்

போர்ஹான்ஸ்

பற்பசை




புகழ்பெற்ற பல் வைத்தியர் ஒருவரின் தனித் தயாரிப்பு முறைக்கு தயாரிக்கப்பட்டது. இதில் ஈறுகளை காக்கும் விசேட மருந்துகள் சேர்த்துள்ளது.

பெரும்பாலான பற்கள் ஈறு வியாதிகளினல் இழக்கப்படுகின்றன

அரைவாசிக்கு மேற்பட்ட சிறுவர்களும் கிட்டத்தட்ட எல்லா இளைஞர்களும் ஈறு அழுகல் காரணமாக தமது பற்களை இழக்கின்றனர் என உலகச் சுகாதார நிபுணர்கள் ஒத்துக்கொள்ளுகின்றனர். பெரும்பாலான பற்கள் அழுகியல்ல ஆனல் இவ் ஈறு வியாதியினலேயே இழக்கப்படுகின்றன என இவர்கள் கூறுகின்றனர்.

உறுதியான ஆரோக்கியமுள்ள ஈறுகளிலிருந்தே சிறுவர்களுக்கு உரமான வெண்ணிறப் பற்கள் வளரும். தினமும் போர்ஹான்ஸ் கொண்டு ஈறுகளைத் தேய்த்து பல் துலக்குவதால் ஈறுகள் உரமாகவும் உறுதியாகவும் வளரும். அத்தோடு, பற்களும் சுத்தமாயும் வெண்மையாயும் இருக்கும்.

இளமையில் நன்முறையில் கவனியாது விட்டபடியால்தான் பெரும்பாலான இளைஞர்கள் ஈறுவியாதிகளினல் துன்பப்படுகின்றனர். இதற்கு தினமும் போர்ஹான்ஸ் பற்பசை கொண்டு பல்துலக்குதல் அவசியம். இதனல் அவர்களது ஈறுகள் உறுதியாவதோடு பற்களும் வெண்மையாகவும் சுத்தமாகவும் இருக்கும்.

ஒரு பல்வைத்தியரின் குறிப்புக்குத் தயாரிக்கப்பட்டது போர்ஹான்ஸ்

புகழ் பெற்ற பல் வைத்தியரான டாக்டர் ஆர். ஜே. போர்ஹான்ஸ் டி. டி. எஸ். அவர்களின் தயாரிப்பு முறைக்கு ஈறுகளை பாதுகாக்கவல்ல விசேட மருந்துகளை கலந்து தயாரிக்கப்பட்டது.

வெறும் துலக்குதலினல் பற்களை உரமாயும் வெண்மையாயுமோ, ஈறுகளை உறுதியாயும் ஆரோக்கியமாயுமோ வைத்திருக்க முடியாது. ஈறுகளைத் தேய்த்து பற்களைச் சுத்தஞ் செய்ய போர்ஹான்ஸ் போன்ற ஒரு விசேட தயாரிப்பு முறை அவசியம்.

ஆரோக்கியமான ஈறுகளிலிருந்தே உரமான பற்கள் வளரும். ஈறுகள் எவ்வளவு காலத்திற்கு உறுதியாயும் ஆரோக்கியமாயும் இருக்கின்றனவோ அவ்வளவு காலத்திற்கு இவை உரமாயும் இருக்கும். போர்ஹான்ஸ் ...

உரம் பற்களை என்றும் இளமையுடன் காக்கவும்



உறுதியான ஆரோக்கிய ஈறுகளுக்கும் உரமான வெண்ணிறப் பற்களுக்கும்

என்றும் பாவியுங்கள்

போர்ஹான்ஸ்

பற்பசை





புகழ்பெற்ற பல் வைத்தியர் ஒருவரின் தனித் தயாரிப்பு முறைக்கு தயாரிக்கப்பட்டது. இதில் ஈறுகளை காக்கும் விசேட மருந்துகள் சேர்த்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளம்பரம்

### சுன்னாகம் பட்டண சபை நூல்நிலைய பழைய புதினத்தாள்கள் விற்பனை

15 அந்தருக்குக் குறையாத ஆங்கில, தமிழ் புதினத் தாள்களும் சஞ்சிகைகளும் விற்பனைக்கு இருக்கின்றன. கேள்விப்பத்திரங்களை சுன்னாகம் பட்டண சபை அலுவலகத்தில் உடனடியாகப்பெற்று 15-10-67-க்கு முன்னர் அனுப்பிவைக்கவும்.

பொ. நாகலிங்கம்,
தலைவர்,
பட்டணசபை,
சுன்னாகம்.

பட்டணசபை, அலுவலகம்,
சுன்னாகம், 7-10-67.

279

**MANOHARA**
JAFFNA
Daily at
4-45, 7-00, 9-45
**EUROPE BY NIGHT**
(Adults Only)

**REGAL** JAFFNA
Time: 4-45 7-00 p. m.
9-45 p. m.
Anthony Quinn-Alan Bates
in
**ZORBA THE GREEK**
(Adults)

**ராஜா RAJAH**
யாழ்ப்பாணம் JAFFNA.
தினசரி 2-30, 6-30, 9-30
போயாதினங்களில்4காட்சி
சிவாஜி - கே. ஆர். விஜயா
நடித்த
**த ங் கை**

உதைபந்தாட்டம்

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம், பாடசாலை விளையாட்டுச் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் கல்லூரிகளுக்கிடையேயான உதைபந்தாட்டப் போட்டியில் இன்று கோப்பாய் கிறிஸ்தியன் கல்லூரியும் வசாவிளான் மத்திய மகாவித்தியாலயமும் 'பி' டிவிசனிலும் 'ஏ' டிவிசனில் தெல்லிப்பளை யூனியன் கல்லூரியும் பரமேஸ்வராக் கல்லூரியும் மோதவுள்ளன.

இப்போட்டிகள் யாழ். விளையாட்டரங்கில் நடைபெறும். [வி. நி.]

## மாதகல், இளவாலை ஒளிமயமாகும்

குரும்பசிட்டி, ஞாயிறு

மாதகல், இளவாலை ஆகிய கிராமங்களுக்கு மின்சாரம் வழங்கப்படவிருக்கின்றது. மின்சார இலாகாவினர் காங்கேசன்துறை எம். பி. திரு. எஸ். ஜே வி. செல்வநாயகத்துக்கு எழுதியுள்ள கடிதத்தில் மின்சாரம் வழங்க ஏற்படும் செலவினை மந்திரிசபை அங்கீகரித்தவுடன் உடனடி விநியோகம் நடைபெறும் எனத் தெரிவித்துள்ளனர்.

சுன்னாகம், ஞாயிறு

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி எதிர்வரும் விஜயதசமியை முன்னிட்டு வருகிற பன்னிரண்டாம் திகதி சரஸ்வதி பூசை நடாத்த விசேஷ ஒழுங்குகள் செய்துள்ளது.

**நியூ காலிங்கன்**
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
எம். ஜி. ஆர்-சரோஜாதேவி
நடித்த
**தாயின் மடியில்**

## தேவை

பாடகர்:-

வாத்தியக் கோஷ்டிக்கு பக்திப் பாடல்களும், சினிமாப் பாடல்களும் பாடக்கூடிய பாடகர் தேவை. நேரில் வரவும். ஏ. ஐயாத்துரை, சந்தை வீதி, உடுப்பிட்டி. 2219

காஷியர்

கொழும்பு, 4, காலி வீதியில் அமைந்துள்ள பிரபலமான சைவ ஹோட்டல்ஒன்றுக்கு ரொக்கமாக பிணைப் பணம் செலுத்தக் கூடிய காஷியர் தேவை. தங்கும் இடவசதி உண்டு. விவாகம் ஆகாதவர் விரும்பத்தக்கவர். விளம்பர இல. 2227, ஈழநாடு மே/பா. த. பெ. எண் 49, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு எழுத்துமூலம் விண்ணப்பிக்கவும். 2227

## கல்வி

வகுப்புகள்

ஆங்கிலம், தமிழ், விஞ்ஞானம், கணிதம், தையல் முதலிய பாடங்களில் தேர்ச்சிபெற்றவர்களால் ரியூசன் சொல்லிக் கொடுக்கப்படும். விபரங்கட்கு: 16/3, மவுண்ட் காமெல் ரேட் லேன், யாழ்ப்பாணம். 2230

## விற்பனைக்கு

வயல் காணி

வேலணை கிழக்கில் நெடுங்கேணியிலும் மணியகாரன் வீட்டடியிலும் (தெருவுக்குக் கிழக்கு ஓரமாகவும்) காணிகள் விற்பனைக்குண்டு. விரும்பியோர் விளம்பர இல. 2232, ஈழநாடு மே/பா. த பெ. எண். 49, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு எழுத்துமூலம் விண்ணப்பிக்கவும். 2232

## வரி விளம்பரம

### மரண அறிவித்தல்


சின்னத்தம்பியின் பாரியாரும், இராசையா, சிங்கராசா, கந்தையா இராசம்மா, அன்னமுத்து, தங்கரத்தினம், அன்னலட்சுமி ஆகியோரின்தாயாரும், மூத்துத்தம்பி, திருச்செல்வம் ஆகியோரின் மாமியாருமாகிய தையல்பிள்ளை இறைவனடி சேர்ந்துள்ளார். தகனககிரியை காங்கேசன்துறை ஐயனார் கோவிலடி மயானத்தில் இன்றுகாலை 9 மணிக்கு நடைபெறும். நண்பர்களும் உறவினர்களும் இத்தகவலை ஏற்றுக் கொள்ளவும். தகவல்; இராசையா. 2233

**3-வது குதூகல வாரம்!**

கிங்ஸ்லி [கொட்டாஞ்சேனை] — பிளாஸா [வெள்ளவத்தை]
தினசரி பி.ப. 2-00, மாலை 6-00, இரவு 9-30 மணிக்கு
விஜயா [மட்டுநகர்] — ஸ்ரீகிஷ்ணா [திருமலை]
தினசரி பி. ப. 2-00, மாலை 6-00, இரவு 9-30 மணிக்கு
வெலிங்டன் [யாழ்ப்பாணம்]
தினசரி பி. ப. 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணிக்கு
ராஜ் [நீர்கொழும்பு]
**மற்றும் 4 திரைகளில்!**

தென்னகத்தில் 100 நாட்களுக்கு மேல் ஓடி ஜனாதிபதியின் பரிசு பெற்று அநேகரின் பாராட்டையும் பெற்ற உணர்ச்சியூட்டும் சித்திரம்!

ஜெய்சங்கர் - நாகேஷ் - சுந்தரராஜன்
ஜமுனா - ஷோபா - ஜி. வரலக்ஷ்மி
பேபி பத்மினி இருவேடங்களில் நடித்த



ஏ. வி. எம். புரொடக்ஷன்ஸ்

**குழந்தையும் தெய்வமும்**

டைரக்ஷன்: கிஷ்ருண பஞ்சு — இசை: எம். எஸ். விஸ்வநாதன்

# நெல் வயலிற் காணப்படும் புற்களையும் களைகளையும் ரேக் ஷெல் களைப் புற்கொல்லி 'ஆர்'

பாவித்து, இனிக் கட்டுப்படுத்தலாம்



கோழிச்சூடன்



சிறுகோரை




நெற்சப்பி

நெல் வேளாண்மை செய்வோரின் நெடுநாளைய பிரச்சினைகளில் ஒன்று தற்பொழுது தீர்க்கப்பட்டிருக்கிறது; விளைச்சல் குன்றுவதற்கு ஏதுவாக இருக்கும் புற்களையும் களைகளையும் ஒழிக்க வழி பிறந்திருக்கிறது.

ரேக் ஷெல் களைப்புற் கொல்லி "ஆர்" என்னும் புதிய களைப் புற்கொல்லி ஒன்று தற்பொழுது விற்பனைக்கு வந்திருக்கிறது. கோழிச் சூடன், குதிரைவாற் புல் நெற்சப்பி, ஆடிப்புல், கடுக்கன் புல், மொண்டி, பன், கோரை, சந்தணக் கோரை, சிறு கோரை, கிடச்சி போன்ற களைகளை இது வெகு செம்மையாகக் கட்டுப்படுத்துகிறது. விளைச்சலை இனி 30 சத விதம் வரை அதிகரிக்கச் செய்யலாம்.

ரேக் ஷெல் களைப்புற்கொல்லி "ஆர்" பாவனைக்குஇலகுவானது; பாதுகாப்பானதும் கூட. ரேக் ஷெல் களைப்புற்கொல்லி "ஆர்" நெற் பயிருக்குத் தீங்கு செய்யாது. சிபார்சு செய்த அளவைவிட இரு மடங்கு அல்லது மும்மடங்கு கூடுதலாக




குதிரைவால் புல்





சந்தணக்கோரை





நற்செயலாக உபயோகித்தாற்கூட நெற் பயிருக்கு நிரந்தர சேதம் எதுவும் ஏற்படாதெனை ஆராய்ச்சியாளர்கள் நடத்திய பரிசோதனைகள் மூலம் தெரியவந்திருக்கிறது.

அயலிலுள்ள பயிர்களைச் சேதப்படுத்தக் கூடிய ஆவியோ புகையோ ரேக் ஷெல் களைப்புற்கொல்லி "ஆர்" என் னும் பொருளிலிருந்து வெளிப்படுவதில்லை.

ரேக் ஷெல்களைப்புற்கொல்லி "ஆர்" ஒரு திரவச் சேர்வையாகும்; ஒவ்வொரு கலன் திரவத்திலும் 4 இறுத்தல் டி பி. ஏ என்னும் பொருள் சேர்க்கப்பட்டிருக்கிறது. வழக்கமான நிலைமைகளில் ஓர் ஏக்கர் நெற் காணியிற் காணப்படும் களைகளைக் கட்டுப்படுத்த, 20 முதல் 40 கலன் நீரில் ஆக 3/4கலன் அளவு ரேக்ஷெல் களைப்புற்கொல்லி "ஆர்" சேர்த்து உபயோகித்தல் போதுமானது.

மேலும் தகவல் வேண்டின் — இலங்கை ஷெல் கம்பனி லிமிட்டெட் ஸ்தாபனத்துக்கு எழுதவும். த. பெ. 280. கொழும்பு.

**ரேக்*** ஷெல் களைப் புற்கொல்லி 'ஆர்'

* Trade Mark of Monsanto Chemical Co.

ஷெல் ரசாயனப் பொருட்கள் SHELL

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளிநொச்சி

# சிசுக்கொலை வழக்கு: இன்ஸ்பெக்டர் சாட்சியம்

யாழ்ப்பாணம், திங்கள்
"இறந்த குழந்தை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டது. குழந்தையின் கழுத்தில் காயமிருந்தது. குழந்தையின் தாயான செல்லம்மாவும், ஆஸ்பத்திரிக்கு வந்தார். அவரின் வாக்குமூலத்தை பதிவு செய்தேன்".

கிளிநொச்சி சிசுக் கொலை வழக்கில் சாட்சியமளித்த பொலிஸ் இன்ஸ்பெக்டர் வியனகே டி. சில்வா மேற்கண்டவாறு கூறினர். இவ்வழக்கு வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் வி. மாணிக்கவாசகர் முன்னிலையில் நேற்றுக்காலை இரண்டாவது தினமாக விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் கிளிநொச்சியைச் சேர்ந்த 9 மாதக் குழந்தையான இராசு விக்னேஸ்வரனை 65-ம் ஆண்டு ஆகஸ்ட் 25-ந் திகதி கொலை செய்ததாக துரைசாமி இராசம்மா என்ற இளம் பெண்மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

எதிரி சார்பில் அட்வக்கேட் எஸ். தம்பித்துரை, அட்வக்கேட் வி. என். நவரத்தினத்தின் உதவியுடனும், புறக்டர் எஸ். அமிர்தலிங்கத்தின் அனுசரணையுடனும் ஆஜரானர். எதிரிக்காக அரசாங்கத்தால் அட்வக்கேட் ஏ. சிவானந்தனும், முடிக்குரிய தரப்பில் அட்வக்கேட் கே இரத்னேசரும் ஆஜரானர்கள்.

இறந்த குழந்தையின் தந்தையான வெள்ளையன் இராசு சாட்சியமளிக்கையில், குழந்தையின் சடலத்தை அடையாளம் காட்டியதாகக் கூறினர்.

விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

கிளிநொச்சி வர்த்தகர் கடத்தல் வழக்கு

# கார்வாலியோ கழுத்தை 4-ம் எதிரி பிடித்திருந்தார்

## கைலாயபிள்ளை சாட்சியம்

சாவகச்சேரி, ஞாயிறு
"சம்பவதினம் காலை தர்மபுரத்தில் பரந்தன்—முல்லைத்தீவு வீதியருகேயுள்ள எனது கடைவாசலில் சிலருடன் கதைத்துக்கொண்டு நின்றபோது ஒரு கார் முல்லைத்தீவு நோக்கிவரும் சப்தம் கேட்டது. அக்காரை நான் பார்த்தபோது காரினுள் யாரோ "ஐயோ! ஐயோ!" எனக் குளறும் சப்தம் கேட்டது. எனக்குச் சமீபத்தில் அக் கார் வரும்போது புன்னுக்கு வந்த ஒரு வாகனத்துக்கு இடம் கொடுப்பதற்காக அக்கார் சிறிது தாமதப் படுத்தப்பட்டது. அச்சமயம் காரினுள் நான் பார்த்தபோது முன் ஆசனத்தின் இடது பக்கத்தில் ருல் வியாபாரி கார்வாலியோ இருந்தார். 4—ம் எதிரி தம்பிராசா கார் வாலியோவின் கழுத்தில் பிடித்துக் கொண்டிருந்தார்."

கிளிநொச்சி ருல்வியாபாரி கார்வாலியோ கடத்தல் வழக்கு சாவகச்சேரி நீதவான் திரு. விக்னராசா முன்னிலையில் மீண்டும் விசாரணைக் கெடுக்கப்பட்டபோது சாட்சியமளித்த தர்மபுரம் வாசியான நீலமேகம் கைலாயபிள்ளை [45வயது] மேற்கண்டவாறு கூறினர்.

இவ்வழக்கில் இவ்வருடம் ஜூன்மாதம் சதாசிவம் ரத்தினம், பிலிப்ராசதுரை, கதிரவேலு காளிமுத்து, பி. தம்பிராசா அல்லது நமசிவாயம், கே. தம்பிராசா அல்லது சின்னத்துரை, பொன்னையா தனபாலசிங்கம் ஆகிய ஆறுபேரும் கத்தி, துப்பாக்கி முதலிய பயங்கர ஆயுதங்களுடன் சட்டவிரோதமாகக் கூட்டம் கூடி ருல் வியாபாரியான எம். கார்வாலியோ என்பவரைக் கடத்தி 21 ம், 22 ம். 23 ம் திகதிகளில் தர்மபுரம் காட்டில் வைத்துக் கையால் அடித்துப் பயமுறுத்தியதுமாக பத்துக் குற்றச்சாட்டுகளின் பேரில் கிளிநொச்சிப் பொலிசாரால் வழக்குத் தாக்கல்செய்யப்பட்டுள்ளது

எதிரிகள் சார்பில் அட்வகேட் ரீ. தம்பித்துரை புரக்டர்கள் எஸ். பி. மயில்வாகனம், வி. செல்லத்தம்பி, கே. கந்தசாமி ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானர். வழக்காளி தரப்பில் கிளிநொச்சிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் பி. ராஜேஸ்வரன் வழக்கை நடத்தினர்.

சாட்சி கைலாயபிள்ளை தனதுசாட்சியத்தில் மேலும் கூறியதாவது:

காரினுள் சென்றவர்களில் பின் ஆசனத்தில் 3 ம் எதிரி காளிமுத்துவும் 6 ம் எதிரி தனபாலசிங்கமும் இருந்தனர். காரை 5 ம் எதிரி செலுத்திச் சென்றர். பின்னர் 23 ம் திகதி மாலை 4-30 மணிக்குக் கார்வாலியோ பொலிசுடன் வந்ததைக் கண்டேன் என்றர். மேல் விசாரணை இம்மாதம் 16 ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

### எனது கொள்கை...

[3-ம் பக்கத் தொடர்ச்சி]
சிக்கலான விஷயங்களில், 'பொறுப்பற்ற, சுலபமான பாதையில்' தாம் செல்லத் தயாராயில்லை என்றும் ஜோன்சன் குறிப்பிட்டார்,

நான் செய்யவேண்டியது எது என்பதை நான் தேர்ந்தெடுத்துவிட்டேன். அதை நான் மாற்றப்போவதில்லை என்ருர் ஜோன்சன்.

### குண்டுவீச்சை...

[3-ம் பக்கத் தொடர்ச்சி]
வியட்னும் பேருக்குத் தீர்வு காணும் முயற்சிகளைத் தாம் ஒரேயடியாக நிறுத்தி விடவில்லையென்றும், சம்பந்தப்பட்ட கட்சிகளுடன் தாம் தொடர்பு கொண்டு வருவதாகவும் யூதாண்ட் மேலும் குறிப்பிட்டார்.

தற்போதைய ஐ.நா.பொதுச்சபைக் கூட்டத்தொடருக்கு வந்துள்ள நாடுகளில், வியட்னும் சம்பந்தப்பட்ட நாடுகளுடன் தாம் சந்தித்துப் பேசி வருவதாக அவர் கூறினர்.

### கி. ஐரோப்பிய...

[3-ம் பக்கத் தொடர்ச்சி]
விய ஜனதிபதி டிட்டோ, ஐ அ. கு. ஜனதிபதி நாஸர் மற்றும் தலைவர்களுடன் பேசவிருப்பதாகப் பிரதமர் இந்திரா காந்தி கூறினர்.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி [illegible] இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் [illegible] ஒக்டோபர் மாதம் 9-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

வெடிகுண்டு வீச்சு:

## இருவர் ரிமாண்டில்

குரும்பசிட்டி, ஞாயிறு
சங்கானை பஸ் நிலையத்தில் வைத்து கார் ஒன்றிற்கு கைக்குண்டு வீசி சேதப்படுத்தியதாக சந்தேகத்தின் பேரில் ஆறுமுகம் தியாகராசா என்பவரை சங்கானைப் பொலிசார் கைது செய்து மல்லாகம் வாஜிஸ்திரேட் திரு. ரி. எஸ். நிற்சிங்கா முன்னிலையில் ஆஜர் செய்தபோது சந்தேக நபர் தியாகராசாவை இம்மாதம் 15-ந் திகதிவரை ரிமாண்டில் வைக்குமாறு மாஜிஸ்திரேட் உத்தரவிட்டார். சந்தேகநபரின்சார்பில்வழக்கறிஞர் சிவ. ஸ்ரீதரன் ஆஜராகியிருந்தார்.

இச்சம்பவம் சம்பந்தமாக ஏற்கனவே வன்னியன் சின்னத்தம்பி என்பவர் இம்மாதம் 12-ம் திகதி வரை ரிமாண்டில் வைக்கப்பட்டுள்ளாரென்பதுகுறிப்பிடத்தக்கது,

### அதிக வருமானம்

யாழ்ப்பாணம், திங்கள்
யாழ்ப்பாணத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட பஸ் சேவைகளில் காரைநகரிலிருந்து புதுக்குடியிருப்பிற்கு செல்லும் சேவை அதிக வருமானத்தைக் கொடுத்துள்ளது.

பருத்தித்துறையிலிருந்து நாயாறுக்கு மற்றெரு புதிய சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது இந்த பஸ், காலை 4-15 மணிக்குப் புறப்பட்டு, பரந்தன், தருமபுரம், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு ஊடாக நாயாறுக்கு சென்று, யாழ்தேவியில் வரும் பிரயாணிகளை ஏற்றிச் செல்வதற்காக நண்பகல் பரந்தனை வந்தடையும். இச்சேவையும் அதிக வருமானத்தைக் கொடுக்குமென எதிர் பார்க்கப்படுகிறது.

## பாராட்டுவிழா

யாழ்ப்பாணம், திங்.
திருவாளர்கள் செ. மயில்வாகனம், அ தனபாலசிங்கம் ஆகிய இருவரும் சமாதான நீதவான்களாக நியமிக்கப்பட்டதைக் குறித்து இன்று அளவெட்டி கிராம முன்னேற்றச் சங்க ஆதரவில் அளவெட்டி மகாஜன சபை மண்டபத்தில் பாராட்டுவிழா நடைபெறவிருக்கின்றது. இவ்விழாவுக்கு காங்கேசன்துறை எம். பி. திரு எஸ். ஜே வி செல்வநாயகம் தலைமைவகிப்பார்.

### குடிதண்ணீர்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]
வேண்டுமெனக் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த பல்லாண்டுகளாக கடற்கரையை மருவிய பிரதேசமாகிய தோப்புக்காடு நன்னீர் கிடைக்காமல் மக்கள் பெரும் அவதிக்குள்ளாகியுள்ளனர். இதுபற்றி கூட்டுறவு சமாஜத்திற்கு பல முறை தெரியப்படுத்தியும் இதுசம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்புகொண்டும் பயன் ஏதும் ஏற்படவில்லையென்று தெரிகிறது. [நி]

### சீன-இலங்கை....

[1-ம் பக்கத்தொடர்ச்சி]
தென்கிழக்காசிய பொருளாதார கூட்டு அமைப்பு எந்த ஒரு குறிப்பிட்ட நாட்டுக்கும் எதிரானதல்ல வென்று தாம் கருதுவதாகக்கூறிய இலங்கைப் பிரதமர் தமதுநாடு பிராந்திய கூட்டுறவில் நம்பிக்கை கொணர்விக்கிறது என்றும் தென்கிழக்காசிய கூட்டு அமைப்பில் சேர்வதுபற்றி ஆலோசித்து வருவதாகவும் குறிப்பிட்டார். தாம் இலங்கை திரும்பியபின்னர் ஒரு முடிவு எடுக்கப்படும் என்று அவர் கூறினர்.

# 'புதிய சகாப்தத்தை ஏற்படுத்தியவர் கந்தையா'

உடுப்பிட்டி, ஞாயிறு
"தாம் தீவிர வாதிகள் என்று தம்மைப் பற்றிக் கூறிக் கொள்ளுபவர்கள் மக்களிடையே பிளவையேற்படுத்த முயலுகிருர்களேயன்றி சமுதாய முன்னேற்றத்தில் அவர்களுக்குச் சிறிதேனும்அக்கறையில்லை. "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்ற பொய்யாமொழியை அனுசரித்து நடந்து 35 வருடங்களுக்கு முன் அமரர் பொன். கந்தையா ஈழத்தில் புதிய சகாப்தத்தை ஏற்படுத்தினர். சமசமாஜக் கட்சியொன்றே வடபகுதியில் தீண்டாமை ஒழிப்புக்கு அத்திபாரமிட்டது. கந்தையா பாராளுமன்றத்தில் எதிர்க் கட்சியிலிருந்து சொண்டே நாட்டிற்குச் செய்த அளப்பரிய சேவைகளை நாம் மறக்க முடியாது. தேசிய அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் இரு தமிழ்க் கட்சிகள் இங்கே வந்ததும் பரஸ்பரம் கண்டனம் செய்வதும், சவால் விடுவதும் தமிழினத்தைக் குழப்பிவிடும் செயல்களாகும். பண்டாரகம இடைத் தேர்தல் முடிவு தேசிய அரசாங்கத்தின் மீது நாட்டு மக்களுக்குள்ள வெறுப்பையே காட்டுகிறது. அரசாங்கம் இதனை ஒரு பாடமாகக் கொள்ள வேண்டும்"

இவ்வாறு வதிரியில் நடைபெற்ற முன்னைநாள் பருத்தித்துறை எம்.பியும் கம்யூனிஸ்ட் பிரமுகருமான அமரர் பொன்.கந்தையா ஞாபகார்த்தக் கூட்டத்தில் பேசுகையில் வடபிரதேச சமசமாஜ வாலிபர் சம்மேளனத் தலைவர் டாக்டர் எஸ். எஸ். மாசிலாமணி கூறினர்.

திரு. எஸ். கே. இராஜூ தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திருவாளர் வீ. ஜெயராசா, கே. பொன்னையா, எஸ். தியாகராசா, கே. எல். நாதன் ஆகியோரும் பேசினர்.

### சேவையில்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]
பந்தமாக நேரில் பேட்டி காண சங்க தூதுகோஷ்டி கொழும்பு சென்றது.

யாழ்ப்பாணத்தில் பஸ்கள் அடிக்கடி பழுதடைவது பற்றி ஆராய்ந்தபோது மழைகாலத்தில் டிசல் எண்ணையில் மழைத் தண்ணீர்செல்வதும்இதற்கு ஒரு காரணமென்று பொறுப்பாளரிடம் கூறப்பட்டது,

சாவகச்சேரிக்கு கம்பெனி காலத்திலிருந்தது போல் தனியான சேவைகளை நடாத்தும்படியும் காலையிலும் நண்பகலிலும் மாலையிலும் கொடிகாமத்திலிருந்து யாழ்ப்பாணத்துக்கு மேலதிக சேவைகள் வேண்டுமென்றும் கோஷ்டி கேட்டுக் கொண்டது.

புதிதாகக் கட்டப்பட்டுள்ள பஸ்நிலையம் மழை காலத்தில் ஒழுகுவதாகவும் இதனுல் பிரயாணிகள் கஷ்டப்படுவதாகவும், கியூ' மிக வும் நெருக்கமாகக் கட்டப்பட்டிருப்பதாகவும், தெரிவிக்கப்பட்டபோது அது எங்கள் பொறுப்பல்ல, மாந[illegible] தான் அதற்குப் பொறுப்பு என்று பொறுப்பாளர் தெரிவித்தாராம்.

## புதிய நிர்வாகிகள்

வல்வெட்டித்துறை, ஞாயிறு
வல்வை கணபதி படிப்பக புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். போஷகர்கள். வி. இரத்தினவடிவேல் [பட்டின சபைத்தலைவர்], ஏ. எஸ். யோககுரு. ரி. வாசுதேவர், தலைவர்: கி இராஜவேல், காரியதரிசிரி: லெட்சுமிகாந்தன், தனதிகாரி பி. இராமச்சந்திரன், நிர்வாகசபையொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
டித்துறை, காங்கேசன் துறைப் பகுதிகளுக்கு விநிக்கப்படுகின்றன என்பது பற்றிய பூரண விபரங்களும் இவர்களால் சேகரிக்கப்பட்டுள்ளன. [ந. நி]

### அட்லி பிரபு...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]
துக்குப் பெரிய இழப்பு" என்று அட்லி பிரபுவின் மரணம் குறித்து எலிஸபெத் மகாராணியாருக்கு முன்னுள் இந்திய ராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் அனுப்பிவைத்துள்ள அனுதாபச் செய்தியொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

சுதந்திரக் கட்சித் தலைவர் ராஜாஜி அனுப்பியுள்ள செய்தியில் "இங்கிலாந்தின் பெரியாராக விளங்கி ஆசிய நாடுகளைக் கவர்ந்தார். சமீப காலத்தில் வாழ்ந்த பெரிய மேதை" என்று தெரிவித்துள்ளார்.

மறறும் இந்தியத் துணைப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாயும் அனுதாபச்செய்தி அனுப்பியுள்ளார்.

### காணவில்லை

முத்திரைகள்
யாழ்ப்பாணம் டிஸ்ரிக் கோர்ட், அருகாமையில் உள்ள இலவச சட்டக்கந்தோர் மேசையில் இருந்து ஓர் என்வலப்புடன் ஐந்து ரூ. 100/- முத்திரைகளும், பத்து ரூ. 20/- முத்திரைகளும் காணமல் போய்விட்டன. கண்டெடுப்பவர்கள் சி. சி. சோமசேகரம், 80, நாவலர்வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் சேர்ப்பித்து ரூ. 100/- சன்மானம் பெற்றுக்கொள்ளவும். 2235

## மரண அறிவித்தல்

அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை உதவி ஆசிரியரும், அகில இலங்கைத் தராதரப்பத்திர தமிழாசிரியர் சங்கத் தலைவரும், திருமதி பொன்னம்மாவின் அருமைக் கணவரும், குகதாசன் (நெப்டியூன் பார்மஸி இரத்மலானை), தணிகாசலம் (நில அளவைக் கந்தோர், அநுராதபுரம்), பார்வதீஸ்வரி - செல்வபாக்கியம் இவர்களின் தந்தையும் ஆகிய இடைக்காடு - சன்னதி வீதியைச் சார்ந்த இராமுப்பிள்ளை சோமசுந்தரம் அவர்கள் சிவபதமடைந்து விட்டார்கள். ஈமச்சடங்குகள் 9-10-67 காலை நடைபெறும். சோ. தணிகாசலம். 2231

★

முதலித்தம்பி — பெரியதம்பி — கோண்டாவில் சைவத்தமிழ்க்கலவன் பாடசாலை முன்னைநாள் தலைமை ஆசிரியர்காலமாகிவிட்டார். இவர் வள்ளியம்மையின் கணவரும், [காலஞ்சென்ற] துரைஜா, ராஜேந்திரன், [S, T. O.] கணேஸ்வரி, பூவிலக்ஷ்மி, மகாராணி ஆகியோரின் தந்தையும், கனகசுந்தரம் [அமெரிக்கன் மிஷன் பாடசாலை இணுவில், சிவகடாட்சம் [நீர்ப்பாசன இலாகா] ஆகியோரின் மாமனருமாவர். ஈமக் கிரியைகள் இன்றுமாலை காரைக்காடு மயானத்தில் நடைபெறும். 2238

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org